தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் (ஐ.இ)
Tamil Catholic Association (UK)

PO BOX 1073 Wembley HA0 9JD

Patron: His Lordship Rt. Revd. Dr.Justin Bernard Gnanapragasam
Bishop of Jaffna

Chairperson
Mrs M Thires Arulanandam
+44(0)7818651154

Vice Chairperson
Mrs Noieline M. Balanayagam
+44(0)7539250580

Secretary
Mrs. S Sulany Paththimathasan
+44(0) 7440027672

Treasurer
Mr. Emmanuel M Bastiampillai
+44(0)7355389884

www.tca-uk.org. tcauk@hotmail.co.uk UK Tamil Catholic Association

Registered Charity Number: 1124627

07/05/2025

தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்தின் ஐக்கிய இராச்சியக் கிளையின் அன்பான அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் நலன்விரும்பிகள் அனைவரையும் இறை இயேசுவின் நாமத்தில் வாழ்த்தி வணக்கங்களைத் தெரிவிப்பதில் எமது ஒன்றியம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது. தொடர்ந்துவரும் இக்கட்டான பொருளாதார செலவு நெருக்கடி மத்தியிலும் உங்களின் மனமார்ந்த அன்பளிப்பானது எம்மை ஊக்கிவித்து வருவதற்கு எங்கள் நன்றிகளைத் தெரிவித்து நிற்பதுடன் உங்கள் நல்வாழ்வுக்காகவும் இறைவனை வேண்டிநிற்கிறது.

மேலும் இந்த ஒன்றியமானது இச் சவால் நிறைந்த சூழ்நிலையிலும் எமது தாயகத்தில் துன்பப்படும் ஆதரவற்ற சிறுவர்களின் பராமரிப்பு பணியை களைப்பின்றி அயராது தொடர்ந்து செய்து வருகின்றது. கடந்த 20 வருடங்களாக எமது தாயகத்தில் உள்ள ஆதரவற்ற சிறுவர்கள் வயோதிபர்கள் மாற்றுத்திறனாளிகள் கல்வியில் பின்தங்கியோர் போன்றவர்களின் துயர்துடைத்து ஒளிமயமான எதிர்காலத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்த்து வருகின்றது.

2024-2025காலகட்டத்தில் தாயகத்தில் உள்ள மூன்று மறைமாவட்டங்களுக்கு அவ் மறைமாவட்ட ஆயர்களுக்கூடாக 12, 300 ஸ்ரேலிங் பவுண்களை (4.6 மில்லியன் LKR) நன்கொடையாக அனுப்ப முடிந்துள்ளது.

யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்கு நான்கு ஆதரவற்ற பராமரிப்பு நிலையங்களுக்கும், மன்னார் மறைமாவட்டத்திற்கு நான்கு ஆதரவற்ற பராமரிப்புநிலையங்களுக்கும்,மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு ஒரு பராமரிப்பு நிலையத்திற்குமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு காரணமானவர்கள் நீங்களே.இப்பொருளாதார நெருக்கடியிலும் உங்கள் தன்னலமற்ற இதயபூர்வ அன்பளிப்பும் ஆதரவும் என்றும் மிகையாகாது. அது பாராட்டப் பட்டு போற்றப் படத்தக்கது. மேலும் தொடர்ந்தும் எம் ஒன்றியத்தின் உன்னதபணி உயிர்ப்புடன் இயங்கவும் இறைஆட்சியின் விழிமியங்கள் நம் வாழ்வில் மிளிர்வதற்கும் உங்களின் இதய பூர்வமான ஆதரவையும் பங்களிப்பையும் ஒன்றியம் எதிர்பார்த்து நிற்கின்றது.

இறை இயேசுவின் அன்பும் ஆசீர்வாதங்களும் உங்கள் மீதும் உங்கள் குடும்பத்தினர் மீதும் நிறைவாக கிடைப்பதாக.

நன்றி.
நிர்வாகக் குழு
தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் (ஐ.இ)